செ.வெ.எண். 60/மார்ச்  தேதி : 25.03.2017

**தருமபுரி மாவட்டத்தில் பென்னாகரம், பெரும்பாலை, பத்ரஅள்ளி, இராமகொண்டஅள்ளி, மஞ்சாரஅள்ளி, பருவதனஅள்ளி, பிளியனூர், மாங்கரை, கெண்டையனஅள்ளி, வட்டுவனஅள்ளி, பள்ளிப்பட்டி, ஒன்னப்பகவுண்டனஅள்ளி, வேப்பிலைஅள்ளி, பிக்கிலி, மஞ்சாரஅள்ளி ஆகிய ஊராட்சிகளில் ரூ. 65.35 இலட்சம் மதிப்பீட்டிலான குடிநீர் பணிகள் நடைபெற உள்ளது - மாவட்ட ஆட்சியர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்!**



தருமபுரி மாவட்டத்தில் நிலவும் வறட்சியின் காரணமாக ஏற்பட்டுள்ள குடிநீர் பிரச்சனைக்கு உடனுக்குடன் தீர்வுகாணும் வகையில் 24 மணி நேரம் செயல்படும் 1077 கட்டுப்பாட்டு அறையில் பெறப்படும் புகார்களின் அடிப்படையில் களஆய்வு மேற்கொண்டு தேவை அடிப்படையில் புதிய குடிநீர் திட்ட பணிகள் குறித்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

பென்னாகரம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள 33 கிராம ஊராட்சிகளிலும் முழுவதுமாக குடிநீர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய ஆழ்துளை கிணறுகள் அமைத்தல், திறந்த வெளி கிணறுகளை ஆழப்படுத்துதல், கைப்பம்புகள் அமைத்தல், பைப்லைன் அமைத்தல் மற்றும் நீட்டித்தல் குடிநீர் பற்றாக்குறையை சரிசெய்ய பணிகள் தேர்வு செய்ய அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது.

பென்னாகரம் ஊராட்சி ஒன்றியத்தில் தித்தியோப்பனஅள்ளி கிராம ஊராட்சியை ஆய்வு செய்த மாவட்ட ஆட்சியர் குடிநீர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் பொருட்டு ரூ. 5.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய ஆழ்துளை கிணறு, பைப்லைன், மின் மோட்டார் மற்றும் மாற்று ஆழ்துளை கிணறு அமைத்தல் பணிகளை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கி உத்தரவிட்டார்.

அவற்றில் பென்னாகரம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள பெரும்பாலை ஊராட்சியில் ஒரு பணிக்கு ரூ. 3.00 இலட்சம், பத்ரஅள்ளி ஊராட்சியில் இரண்டு பணிக்கு ரூ. 5.00 இலட்சம், இராமகொண்டஅள்ளி ஊராட்சியில் ஒரு பணிக்கு ரூ. 5.00 இலட்சம், மஞ்சாரஅள்ளி ஊராட்சியில் ரூ. 9.00 இலட்சம், பருவதனஅள்ளி ஊராட்சியில் இரண்டு பணிக்கு ரூ. 5.10 இலட்சம், கூத்தப்பாடி ஊராட்சியில் ஒரு பணிக்கு ரூ. 2.50 இலட்சம், பிளியனூர் ஊராட்சியில் ரூ. 1.75 இலட்சம், மாங்கரை ஊராட்சியில் ஒரு பணிக்கு ரூ. 6.00 இலட்சம், கெண்டையனஅள்ளி ஊராட்சியில் ஒரு பணிக்கு ரூ. 2.00 இலட்சம், வட்டுவனஅள்ளி ஊராட்சியில் ஒரு பணிக்கு ரூ. 5.00 இலட்சம், பள்ளிப்பட்டி ஊராட்சியில் ஒரு பணிக்கு ரூ. 6.00 இலட்சம், ஒன்னப்பகவுண்டனஅள்ளி ஊராட்சியில் ஒரு பணிக்கு ரூ. 2.50 இலட்சம், வேப்பிலைஅள்ளி ஊராட்சியில் ஒரு பணிக்கு ரூ. 5.00 இலட்சம், பிக்கிலி ஊராட்சியில் ஒரு

பணிக்கு ரூ. 3.00 இலட்சம், மஞ்சாரஅள்ளி ஊராட்சியில் 6 பணிக்கு ரூ. 4.50 இலட்சம் என 23 பணிகளுக்கு ரூ. 65.35 இலட்சம் மதிப்பீட்டில் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு பணிகள் துவங்கப்பட்டுள்ளது.

மேலும் மக்களின் தேவைக்கேற்ப குடிநீர் பற்றாக்குறையை தீர்க்கும் பொருட்டு மாவட்ட கண்காணிப்பு மைய எண். 1077, 1800 425 7016, 1800 425 1071 மற்றும் வாட்ஸ்அப் எண். 8903891077 மூலம் பெறப்படும் புகார்கள் மற்றும் கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட்டு ஊரக உட்கட்டமைப்பு இடைநிரவல் நிதியிலிருந்து குடிநீர் தேவை பூர்த்தி செய்ய கூடுதல் திட்ட பணிகள் மேற்கொள்ளப்படும் என மாவட்ட ஆட்சியர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.